பக்கங்கள்: 13

காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 23 வெள்ளிக்கிழமை 05.04.2024 கதிர் 150

# இந்திய மீனவர் அத்துமீறலை தடுக்கும் பரிந்துரைகளை தருக

## நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழு கடற்றொழில் அமைச்சு செயலாளருக்கு அறிவுறுத்து

வடக்கில் இடம்பெறுகின்ற இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி உள்ளிட்ட சட்டவிரோத மீன்பிடி செயற்பாடுகளைத் தடுப்பதற்கான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வை குழு, கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளது. ☞2

## இது ரகசியம் அல்ல!

இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவைக்கான போட்டியில் தமிழ்நாட்டின் அரசியல் களத்தில் கச்சதீவு விவகாரத்தை பெரிதுபடுத்தி அரசியல் செய்ய ஒன்றிய ஆட்சியாளரான பாரதீய ஜனதாக் கட்சி முயற்சிக்கின்றது. தமிழ் நாட்டை ஆளும் திராவிட முன்னேற்றக் கழகம், பாஜக தமிழ்நாட்டில் தமக்கொரு பொருட்டே இல்லை என்று புறங்கையால் ஒதுக்கிவிட முயற்சித்தாலும் பாஜக விடுவதாக இல்லை.

காங்கிரஸ் மற்றும் திமுகாவால் இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்ட கச்சதீவை மீட்பதே தமிழ்நாடு பாஜகவின நிலைப்பாடு என்று தமிழக பாஜக தமிழ்நாட்டுத் தலைவர் அண்ணாமலை அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் கச்சதீவு விவகாரத்தினை பாஜக தேர்தலுக்காக கையிலெடுத்திருக்கின்ற நிலையில் தேர்தலின் பின்னர் அந்த விடயத்திலிருந்து பின்வாங்குவது கடினம் என்று இந்தியாவுக்கான முன்னாள் உயர்ஸ்தானிகரும் இலங்கை ஜனாதிபதியின் ☞2

## நடிகை தமித்தா நேற்றுக் கைது

சமூக செயற்பாட்டாளரும் நடிகையுமான தமித்தா அபேரத்ன மற்றும் அவரது கணவரை குற்றவியல் விசாரணை திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரியாவில் வேலைவாய்ப்புகளை பெற்றுத்தருவதாகத் தெரிவித்து சுமார் 30 இலட்சம் ரூபா மோசடி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் அவர்கள் கைது செய்யப்பட்டனர். நுகேகொடையை சேர்ந்த ஒருவரால் பொலிஸ் தலைமையகத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய, பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

இந்த நிலையில், நீதிமன்றத்தில் சரணடைவதற்காக தமித்தா அபேரத்ன மற்றும் அவரது கணவர் கோட்டை நீதிவான் நீதிமன்றத்திற்கு சென்றிருந்தனர். இதன்போது நீதிமன்றம் அவர்களைப் பொறுப்பேற்கவில்லை. பின்னர் குறித்த இருவரும் நீதிமன்றத்திலிருந்து ☞2

## வடக்கு மக்களின் பிரச்சினைகளை தீர்க்க விரும்பும் தலைவர்கள் எம்மோடு இணைக

### ஜே.வி.பி. தலைவர் யாழ்ப்பாணத்தில் அழைப்பு

வடக்கு மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று செயற்படுகின்ற தலைவர்கள் எம்முடன் ஒன்றிணையவேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமாரதிஸாநாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாம் உங்களுடன் கொடுக்கல் வாங்கல் செய்து வியாபார அடிப்படையில் பேரம்பேசுவதற்காக வருகை தரவில்லை. நாடு மாற்றத்தினை எதிர்பார்க்கின்றது. அந்த மாற்றத்தினை தேசிய ரீதியில் ஒற்றுமையுடன் மேற்கொள்ள வேண்டும்.

நாம் 13 தருகின்றோம், 13 பிளஸ் தருகின்றோம் என்று கூறவில்லை. அது அரசியல் வியாபரம். நாம் ☞2

## புத்தாண்டு விடுமுறைக் காலத்திலும்கூட அத்தியாவசிய சேவைக்கது தடைகூடாது

### அரச அதிகாரிகளுக்கு ரணில் அறிவுறுத்து

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டு விடுமுறை காலத்தில் பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் அத்தியாவசிய சேவைகைள் மற்றும் ஏனைய அரச சேவைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கான சரியான வேலைத்திட்டத்தை தயாரிக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம், பாதுகாப்பு, சுகாதாரம், போக்குவரத்து, மின்சாரம் உள்ளிட்ட துறைசார் ☞2

### நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலில்

## போட்டிக்கே வரமாட்டார் என்பதை 'மே'க்குப் பின் ரணில் அறிவிப்பார்

மே மாதத்தின் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்பதை அறிவிப்பார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னரே தகவல்களை அறிந்திருந்தால் அவர் அந்தத் தாக்குதல்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். தகவல்கள் தெரிந்திருந்தும் ☞2

## சு.கட்சி தலைவராக மைத்திரி செயற்பட இடைக்காலத் தடை

### கொழும்பு மாவட்ட நீதிமன்று பிறப்பித்தது

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளர் பதவியில் மைத்திரிபால சிறிசேனசெயற்படுவதை தடுக்கும் வகையில், கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க விடுத்த வேண்டுகோளை நேற்றுப் பரிசீலித்த நீதிமன்றம் ஏப்ரல் 18 வரை அமுலாகும் வகையில் குறித்த தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியின் தவிசாளர் பதவியை வகிப்பதற்கு தகுதியற்றவர் என்பதால், அவரை அந்த பதவியில் இருந்து நீக்குவதற்கான நிரந்தர தடையுத்தரவை கோரி முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

மனுதாரரான முன்னாள் ஜனா திபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க ☞2

## அடுத்த 5 வருடங்களில் அரசியலில் இருந்து ஓய்வு

### அமைச்சர் டக்ளஸ் உதிர்த்த வார்த்தைகள்

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலுடன் அரசியலில் இருந்து ஓய்வு பெறத் தீர்மானித்துள்ளதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்தொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற சமூர்த்தி உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் ஆயுதப்போராட்டத்தில் இருந்து அரசியலில் நீரோட்டத்துக்கு பல்வேறு தடைகளைக் கடந்து வந்தவன்.

தமிழ் மக்களின் அரசியல் அன்றாடப் பிரச்சினை மற்றும் அபிவிருத்தி என்பவற்றை எனது அரசியல் காலத்தில் முடிந் ☞2

## இளம் குடும்பஸ்தர் நேற்றிரவு கத்தியால் குத்திக் கொலை

### கிளிநொச்சியில் நேற்றுச் சம்பவம்

கிளிநொச்சியில் கத்தியால் குத்தப்பட்டு இளம் குடும்பஸ்தர் ஒருவர் கொல்லப்பட்டார் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். பாடசாலை நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வழியில் ஏற்பட்ட தகறாறே கொலைக்குக் காரணம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரமந்தனாறு பகுதியைச் சேர்ந்தவரான சவரிமுத்து ஜோன் பற்றிஸ் (வயது 30) என்ற இளம் குடும்பஸ்தரே கொல்லப்பட்டார். கத்திக் குத்துக் காயங்களுக்கு உள்ளான அவரை அங்கிருந்தவர்கள் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்து விரைந்த போதும் வழியிலேயே அவரது உயிர் பிரிந்து விட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கொலையைச் செய்தார் என்று சந்தேகிக்கப்படும் ஒருவர் தருமபுரம் ☞2

## கல்வி அமைச்சின் இணையத்துள் ஊடுருவி 'ஹக்' செய்த மாணவன்

இலங்கை கல்வி அமைச்சின் இணையத்தளம் நேற்று 'ஹக்' செய்யப்பட்டது. தளத்தில் காணப்படும் பாதுகாப்புக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவதற்காக இந்த ஊடுருவல் நிகழ்த்தப்பட்டது என்ற தகவலுடன் இணையத்தளம் 'ஹக்' செய்யப்பட்டுள்ளது. ☞2

## படை விட்டோடிகளுக்கு மீண்டும் பொதுமன்னிப்பு

இலங்கைப் படைகளிலிருந்து தப்பியோடியோர் சட்ட ரீதியில் சேவையிலிருந்து விலகிக்கொள்வதற்கான பொது மன்னிப்பு காலத்தை பாதுகாப்பு அமைச்சு மீண்டும் அறிவித்துள்ளது.

இதற்கமைய ஏப்ரல் 20 முதல் மேல 20 வரையயான ஒரு மாத காலம் பொது மன்னிப்புக்கானதாக அறிவிக்கப்பட் ☞2

## அனுராதபுரம் எம்.பி. நந்தசேன நேற்று அதிகாலை திடீர் மறைவு

சிறீ லங்கா பொது ஜன பெரமுனவின் அனுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.நந்தசேன நேற்று அதிகாலை காலமானார்.

திடீரென ஏற்பட்ட சுகவீன நிலைமை காரணமாக அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த அவர் தனது 69ஆவது வயதில் காலமானார்.

இந்நிலையில், அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடத்துக்கு வட மத்திய மாகாணத்தின் முன்னாள் சுகாதார அமைச்சர் வீரசேன கமகே பதவியேற்கவுள்ளார்.

## பொலிஸ் மா அதிபருக்கு நீதிமன்றம் அழைப்பாணை

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை இன்று நீதிமன்றத்தில் முற்படுமாறு உயர் நீதிமன்றம் அழைப்பாணை பிறப்பித்துள்ளது.

சமீபத்தில் பொலிஸ் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட இடமாற்றங்கள் தமது அடிப்படை உரிமைகளை மீறுவதாகக் கூறி மூத்த காவல் அத்தியட்சகர்கள் தொடர்ந்த வழக்கிலேயே பொலிஸ் மா ☞2

## இனி இது .....

முன்னாள்செயலாளருமானஒஸ்டின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். ''இந்தியா எல்லைக்கோட்டைத் தாண்டி கச்சதீவுவிடயத்தில் செயற்படுமாக இருந்தால் அது இலங்கையின் இறையாண்மையை மீறும்செயற்பாடாகவே அமையும்.

இந்திய அமைதிகாக்கும் படையினர் இலங்கைக்கு வருகை தந்திருந்தபோதுரணசிங்கபிரேமதாச அவ்விதமான நிலைப்பாட்டினை எடுத்திருந்தார். ஆகவே அவ்விதமான நிலைமைகளை மீண்டும் உருவாக்க முடியாது.

கோவா அருகில் பாகிஸ்தான் இவ்விதமானகடல்ஆக்கிரமிப்புக்களுக்கு முனைகின்றபோது அதனை இந்தியா பொறுத்துக் கொண்டு ஏற்றுக்கொள்ளுமா?

அதேபோன்று வங்களா விரிகுடாவில் பங்களாதேஷ் இவ்வாறு செயற்படுமாக இருந்தால் இந்தியாவின் பதில் என்னவாக இருக்கும்.

அதேநேரம், தமிழ்நாடு மீனவர்களுக்காகவும், வாக்குகளுக்காகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கச்சதீவைக் கோரமுடியும். ஆனால் அந்தக் கோரிக்கைக்கு இலங்கை அரசு அடிபணிந்தால் அதுவடக்கு மீனவர்களின் அரசுக்கான ஆதரவினையும், வாக்களிப்பையும் வெகுவாகக் குறைக்கும்'' என்று அவர் கூறியுள்ளார்.

ஆக மொத்தத்தில் கச்சதீவு விவகாரம் இன்னும் கொஞ்சக் காலத்திற்குச் சூ-டு தணியாமல் தொடரும் என்று எதிர்பார்க்கலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வை குழு, அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட தலைமையில் கூடியது.

இந்தக் கூட்டத்திற்கு வடக்கு, கிழக்கைசேர்ந்தமீன்பிடிசமூகத்தினர் மற்றும் கடற்றொழில் அமைச்சின் செயலாளர்,கடற்றொழில்அமைச்சின் கீழுள்ள அரச நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

வடக்கு கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மேற்கொள்ளும் சட்டவிரோத மீன்பிடியால் தமது வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக வடபகுதி மீனவ பிரதிநிதிகள் இதன்போது சுட்டிக்காட்டினர். அத்துடன், இந்திய மீனவர்களால் மேற்கொள்ளப்படும் இழுவை மடித் தொழிலால் கடல் வளத்திற்குஏற்பட்டபாதிப்புஇதுவரை கணிப்பிடப்படவில்லை என்பதும் குழுவில் வெளிப்படுத்தப்பட்டது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் கரையிலிருந்து 24 கடல்மைல் தூரத்தில் கடல் வளங்கள் குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் வடக்கில் அவ்வாறான கணக்கெடுப்பை சம்பந்தப்பட்ட அரச நிறுவனம் மேற்கொள்ளாமைகுறித்துகுழுவின் தலைவர் தனது அதிருப்தியை வெளியிட்டார்.

இந்த விடயங்களைக் கருத்தில்கொண்டு வடக்கில் இடம்பெறுகின்ற சட்டவிரோத மீன்பிடி செயற்பாடுகளைத் தடுப்பது தொடர்பில் சம்பந்தப்பட்ட அனைத்துதரப்பினருடனும்கலந்துரையாடல்களை நடத்தி, இதனைத் தடுப்பதற்கான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையொன்றை கூடியவிரைவில்நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு குழு, கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன், மீன் ஏற்றுமதிக்காக வெளிநாடுகளிலிருந்து மீன்களை இறக்குமதிசெய்வதற்குவழங்கப்பட்ட அனுமதி குறித்தும் இங்கு நீண்டநேரம்கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், மீன்களை இறக்குமதி செய்து மீன் ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களில்ஒருநிறுவனம், அதிக நோய்த்தொற்றை ஏற்படுத்தக்கூடிய இறால் வகையொன்றை இறக்குமதி செய்வதால் இலங்கையின் ஒட்டுமொத்த இறால் உற்பத்தியும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டிருப்பதாக துறைசார் நிபுணர்கள் சுட்டிக்காட்டினர்.

## இளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். உயிரிழந்தவரின்சடலம் உடல்கூறாய்வுகளுக்காககிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## கல்வி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பினும் அதனைச் செய்தவர் தனது உண்மையான அடையாளத்தை வெளிப்படுத்தவில்லை.

அநாமதேய ஈஈஈ (EEE) என்ற பெயரால் ஊடுருவிய மர்ம நபர், கணினியில் உள்ள பாதுகாப்புக் குறைபாடுகளைமுன்னிலைப்படுத்தி, அங்கீகரிக்கப்படாத அணுகலுக்கு மன்னிப்புக்கேட்டு ஒரு செய்தியை அனுப்பியுள்ளார்.

“அதில் என் பெயர் அநாமதேய ஈஈஈ. நான் தற்போது கபொத உயர் தரத்தில் படித்து வருகிறேன். உங்கள் இணையத்தளத்தின் அங்கீகரிக்கப்படாத அணுகலுக்கு மன்னிக்கவும். உங்கள் இணையத் தளத்தில்சிலபாதுகாப்புகுறைபாடுகள் உள்ளன. ஒரு இலங்கை நாட்டவன் என்ற வகையில் எனது நாட்டின் பாதுகாப்பிற்காக இதை நான் தெரிவிக்கிறேன். இதைச் சரிசெய்யவும். நன்றி'' என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வியாபாரம் செய்பவர்கள் அல்லர். நாம் நாட்டின் எதிர்காலத்துக்காக மாற்றத்தை ஏற்றுக்கொள்ள விரும்புகின்றோம்.

தமிழ்மக்களுக்குபிரச்சினைகள் உள்ளன. விசேடமாக வடக்கு தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் உள்ளன. அந்தப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும்.

அதற்காக, அம்மக்களின் பிரச்சினைகள்தீர்க்கப்படவேண்டும் என்று கருதுகின்ற தலைவர்கள் எம்முடன்ஒன்றிணையவேண்டும். அவர்களுடன் இணைந்து நாம் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்குதயாராகவேஉள்ளோம் என்றார்.

## புத்தாண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சுக்கள் இணைந்து குறித்த வேலைத்திட்டத்தை தயாரிக்க வேண்டியது அவசியமெனவும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

அதேபோல், எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் நாட்டில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்குமான விரிவான வேலைத்திட்டத்தை செயற்படுத்துமாறும் ஜனாதிபதி பாதுகாப்புத் துறையினருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

## நடிகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேறியபோது குற்றவியல் விசாரணைத்திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டனர் என்றார்.

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிபருக்கு இந்த அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான மூவரடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு, பொலிஸ் மா அதிபரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை பிறப்பித்தது.

## படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

படைவிட்டோடிகள் அரசுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையைக் கொண்டிருந்தால் சட்ட ரீதியில் படைகளைவிட்டு விலகுவதற்கு முன்னர் அதனைச் செலுத்தவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த பொது மன்னிப்பானது ஏப்ரல் 2க்கு முன்னர் சேவையிலிருந்து சட்டரீதியில் விலகமால் படையிலிருந்து சென்ற முப்படை வீரர்கள் தொடர்பில் மாத்திரம் செல்லுபடியாகும்.

தற்போது வெளிநாட்டில் உள்ள முப்படையினர் பின்வரும் நிபந்தனைகளுக்கு இணங்க தத்தமது படைப்பிரிவுகளுக்கு வரமாலேயே சேவையில் இருந்து விடுவிப்பு பெற முடியும்.

சட்ட ரீதியில் சேவையிலிருந்து விலகிக் கொள்ள விரும்புவோர், அனுமதியற்ற விடுப்பில் இருந்த குற்றத்தைத் தவிர, அவர்களுக்கு எதிராக எந்த ஒழுக்காற்று நடவடிக்கைகளும் நிலுவையில் இருக்கக்கூடாது.

அவர்கள் மோசடியாகத் தயாரிக்கப்பட்ட கடவுச்சீட்டு மற்றும் பிற ஆவணங்களை உபயோகித்து அல்லதுசட்டவிரோதமானமுறையில் வெளிநாடுகளுக்குச் செல்லவில்லை என்பதை குடிவரவுத் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தவேண்டும்.

அரசின் நிதியுதவியுடன் கூடிய வெளிநாட்டுக்கற்கைநெறிகள்அல்லது வெளிநாட்டு நிறுவனங்களால் முப்படைகளுக்கு வழங்கப்படும் கற்கைநெறிகள்மற்றும்இராஜதந்திர பணிகள் அல்லது வேறு ஏதேனும் தேவைகளுக்காக வெளிநாடு சென்று உரிய காலப்பகுதிக்குள் நாடு திரும்பத் தவறியவர்களுக்கு இந்த பொதுமன்னிப்பு பொருந்தாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

## சு.கட்சி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குமாரதுங்க சார்பில் சட்டத்தரணி கே.எம்.எஸ்.ஆர்.பெரேராவின் ஆலோசனைக்கு அமைய, ஜனாதிபதி சட்டத்தரணி சந்திக்க ஜயசூரியவுடன் சட்டத்தரணிகளான அமில திசாநாயக்க, பூர்ணிமா ரத்நாயக்க ஆகியோர் கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான முன்னிலையில் விடயங்களை சமர்ப்பித்தனர்.

மைத்திரிபால சிறிசேன தொடர்ந்தும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளராக செயற்படுகின்றமைகட்சியின்யாப்பை மீறுவதாக அமைந்துள்ளதென சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினர்.

கட்சியின் யாப்பிற்கு அமைய கூட்டணியில் போட்டியிட்டு ஜனாதிபதி பதவி வகித்தபோது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளராக பதவி வகிப்பதற்கு மைத்திரிபால சிறிசேனவிற்கு இயலுமை இருந்தாலும் ஜனாதிபதி பதவி முடிவுக்கு வந்ததும் அவர் ஆலோசகர் பதவிக்கு தெரிவானதாக சட்டத்தரணிகள் கூறினர்.

இதற்கமைய, மைத்திரிபால சிறிசேன, சுதந்திரக் கட்சியின் ஆலோசகராக பதவி வகித்துக் கொண்டே தவிசாளராக பதவி வகிக்கின்றமை கட்சியின் யாப்பிற்கு முரணானது என்று அவர்கள் தெரிவித்தனர்.

இதனைத் தவிர உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட வழக்கு விசாரணையின் போது மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாலும், 52 நாட்கள் ஆட்சி மாற்றத்தின் போது ஜனாதிபதி என்றவகையில்அவர்மேற்கொண்ட தீர்மானங்கள் தவறானவை என நீதின்றம் தீப்பளித்துள்ளதாலும் மைத்திரிபால சிறிசேன கட்சியின் தவிசாளர் பதவியை வகிப்பதற்கான தகுதியை இழந்துள்ளதாக சட்டத்தரணிகள் நீதிமன்றத்தின் கவனத்திற்குகொண்டுவந்துள்ளனர்.

இதனால், மைத்திரிபாலசிறிசேன கட்சியின் தவிசாளராக பதவி வகிப்பதை தடுத்து நிரந்தர தடை உத்தரவை பிறப்பிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்ககுமாரதுங்கமாவட்ட நீதிமன்றத்தில் கோரியிருந்துடன் அந்த தடை உத்தரவை வழங்கும் வரை அவர் பதவி வகிப்பதைதடுத்து இடைக்கால தடை உத்தரவை பிறப்பிக்குமாறும் கோரியிருந்தார்.

மைத்திரிபால சிறிசேனவிற்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிப்பது தொடர்பிலான கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் வரை தடை உத்தரவொன்றைபிறப்பிக்குமாறும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்த வேண்டுகோளை கவனத்திற்கொண்ட கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான, ஏப்ரல் 18 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் வகையில், மைத்திரிபால சிறிசேன கட்சியின் தவிசாளராக பதவி வகிக்கத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அத்துடன், மைத்திரிபால சிறிசேனவின்தீர்மானங்களைநடைமுறைப்படுத்துவதை தடுக்கும் வகையில் சுதந்திரக் கட்சியின் பதில் செயலாளர் சாரதி துஷ்மந்த மித்ரபால, சிரேஷ்ட உப தவிசாளர் நிமல் சிறிபால டி சில்வா , உப தவிசாளர் ஃபைசர் முஸ்தபா ஆகியோருக்கும் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதனிடையே, குறித்த நீதிமன்ற உத்தரவு தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருத்து வெளியிடுகையில், சுதந்திரக் கட்சியின் தவிசாளர் பதவியை வகிப்பதற்கு நீதிமன்றம் விதித்த இடைக்கால தடையுத்தரவை மதிப்பதாகவும் விரைவில் நீதிமன்றத்தில் விடயங்களை சமர்ப்பிக்கவுள்ளேன் என்றார்.

இதேவேளை, இந்த வழக்குத் தொடர்பில் சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் அமைச்சர் மஹிந்த அமரவீர கட்சி அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

கட்சியின் தவிசாளர் பதவியை மைத்திரிபாலசிறிசேன ஏற்கின்றபோது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை140ஆகஇருந்தது.எனினும் அந்த எண்ணிக்கை தற்போது இரண்டாகமட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

சிறந்த தேசிய அமைப்பாளர்கள் கட்சியில்இருந்துநீக்கப்பட்டுள்ளனர். கட்சியில் இருந்து நீக்கப்பட்ட தேசிய அமைப்பாளர்களின் எண்ணிக்கை ஐந்நூறுக்கும் அதிகமாக பதிவாகியுள்ளது.

கட்சியுடன் எந்தவிதமான தொடர்புகளும் அற்றவர்களே கட்சியுடன் செயற்படுகின்றார்கள். இதன்பிரதிபலனாகவே கட்சிக்கு தற்போதைய நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாமையின்காரணத்தினாலேயேமுன்னாள் ஜனாதிபதிசந்திரிகாபண்டாரநாயக்க குமாரதுங்க நீதிமன்றத்தினை நாடினார்.

பல்வேறு கட்சிகளுடன் கூட்டணி அமைப்பதற்கான சந்தர்ப்பம் இருந்தது. அந்த சகல வாய்ப்புக்களையும் அவர் நிரகரித்துள்ளார். இந்த விடயம் எனக்கு கூட தெரிவிக்கப்படவில்லை.

தவிசாளராக தொடர்ந்தும் மைத்திரிபால சிறிசேன செயற்படுவதில் எமக்குப் பிரச்சினை இல்லை. ஆனால் அரசியல் கூட்டணியை பரந்துபட்ட அளவில் அமைப்பதற்கான வாய்ப்பு அற்றுப்போயுள்ளதகூ என்றார்.


**காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு**

**076 3983858**

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com





காலைக்கதிர் Kalaikkathir

# புதிய பரிமாணம் எடுக்கும் கல்முனைப் போராட்டம்

## கிழக்கு பல்கலை மாணவரும் நேற்றுப் பங்கேற்பு

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்குபல்கலைக்கழகமாணவர்களும்நேற்று (வியாழக்கிழமை) கல்முனை போராட்டத்தில் ஊர்வலமாக வந்து இணைந்து கொண்டனர்.

பல்கலைக்கழகமாணவர்களின்வலுச்சேர்ப்பால் தமிழர்போராட்டம்புதிய பரிமாணம்எடுத்துள்ளது.

கல்முனை வடக்கு பிரதேச செயலக நிருவாகத்தின்மீதான அடக்குமுறைகளுக்கெதிராக சிவில் அமைப்புகள், பொதுமக்களால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள அடையாள எதிர்ப்புப் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும்வகையில் இந் நிகழ்வு இடம்பெற்றது. (05)










# ஆசிரியர் வெற்றிட கணக்கெடுப்பில் உள்ள குறைகளை நிவர்த்திக்குக

## இம்ரான் எம்.பி. கோரிக்கை



(ஹஸ்பர் ஏ.எச்.)

கிழக்கு மாகாண ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தற்போது விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இதில் கிண்ணியா கல்வி வலய வெற்றிடங்கள் முழுமையாக உள்வாங்கப் படவில்லை. எனவே, இந்த வெற்றிடங்களை முழுமையாக உள்வாங்க நடவடிக்கை எடுக்குமாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மக்ரூப், கிழக்கு மாகாண கல்வி அமைச்சு செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்

கல்வி அமைச்சு செயலாளருக்கு நேற்று (வியாழக்கிழமை) அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் அவர் குறிப்பிட்டுள்ளவை வருமாறு –

சமீப காலத்தில் ஓய்வு பெற்ற மற்றும் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்ட ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கிழக்கு மாகாண பொது சேவை ஆணைக் குழுவால் தற்போது விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதில்கிண்ணியாகல்விவலயத்தில் ஓய்வுபெற்றதால்ஏற்பட்டவெற்றிடங்கள் முழுமையாகஉள்வாங்கப்படவில்லை என ஐக்கிய மக்கள் சக்தி ஆசிரியர் தொழில்சங்கத்தால்எனதுகவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆரம்பக் கல்வி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு, தமிழ், இஸ்லாம் போன்ற பல பாட ஆசிரியர்கள் ஓய்வுபெற்ற போதிலும் இவற்றில்சிலபாடங்கள்விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் உள்வாங்கப் படவில்லை.

இதனால் கிண்ணியா கல்வி வலய கற்றல் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்படும் ஆபத்து உள்ளது.

எனவேசகலவெற்றிடங்களையும் சரியாக கணித்து விண்ணப்பம்கோர நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அந்தக் கடிதத்தில்தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

# அம்பாறை மாவட்டத்திலிருந்து தமிழ் மக்களை விரட்டவே கல்முனை செயலக அதிகார பறிப்பு

## அங்கு சென்ற சிறிதரன் எம்.பி. காட்டம்



( வி.ரி.சகாதேவராஜா)

நீதிமன்றத்தில் நிர்வாகம் தொடர்பான வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றநிலையில்கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான அதிகாரங்களைப் பறிப்பதுநீதிமன்றைஅவமானப்படுத்தும்செயலாகும்.

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமானசிவஞானம்சிறீதரன்கல்முனையில் தெரிவித்தார்.

இங்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழுத் தலைவராக ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆனால் இதுவரை அவர் இந்த பக்கமே தலை காட்டவில்லை. ஒரு கூட்டத்தையும் கூட்டவில்லை. இது எந்த நாட்டில் உள்ள சட்டம் ? இதுவொரு பச்சைப் பாரபட்சம். நீதி



இல்லையா? இவ்வாறு கேள்வி எழுப்பினார் அவர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் நிர்வாக பிரச்சினைகள் குறித்த போராட்டம் தொடர்ச்சியாக பத்தாவது நாளாக புதன்கிழமை மாலை இடம்பெற்றது.

அங்கு அவர் சமுகமளித்து போராட்ட மக்களுடன் சிலமணி நேரம் அமர்ந்து அவர்களுக்கு ஆதரவாகப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

பின்னர்ஊடகங்களுக்குகருத்துதெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன் போது அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் ,முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்களான கே. கோடீஸ்வரன், பா.அரியநேத்திரன், சீ,.யோகேஸ்வரன், காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் , தமிழரசு கட்சியின் முன்னாள்வேட்பாளர்செல்வராசா கணேஷானந்தம் உள்ளிட்ட பலர் பங்கேற்று இருந்தனர்.

தமிழ் அரசுக் கட்சியினயாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மேலும் தெரிவிக்கையில் –

அடிப்படையில் அம்பாறை மாவட்டத்தில் நிரந்தரமாக வாழும் தமிழ் மக்களை நிரந்தரமாக துரத்திஅடிப்பதற்குஇன்னொருசமூகம்கையாளுகின்ற யுக்தி போன்று இதனை நாங்கள் பார்க்கின்றோம்.

முழுக்க முழுக்க தமிழ் மக்கள் வாழ்கின்ற பிரதேசத்தில் உள்ள நிர்வாக அலகான பிரதேச செயலகம் செயற்படக் கூடாது என்பதில் ஏனிந்தக் கொலைவெறி.



அந்த பிரதேசத்திற்கான அதிகாரங்களை பறிப்பதற்கு பலரும் முயற்சி செய்கின்றார்கள். குறிப்பாக கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் செலுத்துகின்ற அதிகாரத்திற்கு அம்பாறை மாவட்ட அரசாங்கஅதிபர்துணைபோகின்றமைநீதிமன்றத்தை அவமதிக்கும் குற்றச் செயல் .

இங்குள்ள பிரதேச செயலாளர் சுமுகமாக – சுதந்திரமாக – தனது பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

இங்கு 300 உத்தியோகத்தர்கள் பணியாற்றுகிறார்கள்.ஆனால்அதன்அதிகாரங்களைப் பறிப்பதற்குமறைமுகமாகஅதிகாரபயங்கரவாதத்தை திணிக்கிறார்கள். இலங்கை நீதியின் படி – தர்மத்தின் படி – சட்ட நியாயாதிபதி ஓர் அமைதியான தீர்வை இந்த மக்கள் வேண்டுகின்றார்கள்.

ஒரு பொறுப்புள்ள தமிழ்க்கட்சி என்ற அடிப்படையிலே நாங்கள் சமாதானமாக சட்டரீதியாக இப்பிரச்சினைக்கான தீர்வுக்கு நாங்கள் ஈடுபட்டு வருகின்றோம். அது வெற்றி அளிக்கும் என்ற நம்பிக்கையும் இருக்கின்றது. – என்றார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இனப்பிரச்சினைத் தீர்வு குறித்தும் விவாதிப்பதும் அவசியம்

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவுக்கும் இடையில் நேரடி விவாதம் ஒன்று இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. அடுத்த அரசுத் தலைவர் தேர்தலுக்கான முன்னணிக் குதிரைகளாகக் கருதப்படும் இவர்கள் இருவரும் தாம் அடுத்த அரசுத் தலைவரானால் நாட்டின் பொருளாதாரத்தை எப்படிக் கையாள்வார்கள் என்பது தொடர்பில் ஒரு விவாதத்தை நடத்துவார்களானால் அது பயன்மிக்கதாகவே இருக்கும். ஆனால், பொருளாதாரம் மட்டும் இந்த நாட்டின் பிரச்சினையல்ல, அதற்கும் முந்தையதாக – பொருளாதாரப் பிரச்சினைக்கும் ஆணி வேரானதாக – இருக்கும் இனப் பிரச்சினைக்கு என்ன தீர்வு என்பதையும் இருவரும் விவாதிப்பது மிக முக்கியமானது.

அரசியல் எதிர்த் தரப்பினருக்களுக்கு இடையில் ஆரோக்கியமான கலந்துரையாடல் இடம்பெறுவது இலங்கையின் வரலாற்றில் மிக அரிதானது. நாடாளுமன்றத்திற்குள்ளேயே அவர்கள் வார்த்தைகளால் அடிதடியில் இறங்குகிறார்களே தவிர ஆரோக்கியமான, ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை நடத்தியதில்லை. ஒன்றில் எதுவும் பேசாமல் அமைதியாக இருப்பார்கள் அல்லது வார்த்தைப் போர்களில் ஈடுபடுவார்கள். இந்த நிலைமையை மாற்றி இலங்கையின் எதிர்காலத்திற்கான மிகச் சிறந்த உரையாடலை இரு தலைவர்களும் முன்மாதிரியாக நடத்திக் காட்டினால் அது நல்லதுதான்.

ஆனால், அதற்கான சாத்தியங்கள் இருக்கின்றனவா என்பது கேள்விக்குறியாகவே நிற்கின்றது. ஏனெனில் அண்மையில் கனடாவிற்குச் சென்றிருந்த ஜேவிபி தலைவர் அநுரகுமாரவின் கூட்டத்தில் ஒரு தமிழ் இளைஞர் எழுந்து இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ன என்று கேள்வி எழுப்பியபோது அதற்குப் பதிலளிப்பதில்லை என்று அநுரகுமார முடிவு செய்தார். அதுமட்டுமல்ல கேள்வி கேட்ட இளைஞரையே அந்தக் கூட்டத்திலிருந்து அவரது கட்சியினர் வெளியேற்றுவதைக் காணொலிகளில் பார்க்க முடிந்தது. ஆக, ஜேவிபியால் இது தொடர்பில் ஒரு சிறந்த, திறந்த உரையாடலை நிகழ்த்த முடியுமா என்கிற கேள்வி நியாயமானதே.

அடுத்த அரசுத் தலைவருக்கான போட்டியில் இருக்கும் இருவர் இனப் பிரச்சினைக்கான தீர்வைத் தவிர்த்துவிட்டு தமது விவாதத்தை நடத்துவார்களாயின் அவர்கள் இலங்கை வாழ் தமிழ், முஸ்லிம் மக்களைப் புறந்தள்ளிவிட்டு அரசுத் தலைவர் ஆவதற்கு முயற்சிக்கிறார்கள் என்று பொருள்படும். அத்தகை ஒரு விவாதம் தேவையற்றதும்கூட. ஆனால், அநுரகுமார மற்றும் சஜித் இருவரது அணுகுமுறையும் அவ்வாறானதாகவே இருக்கின்றது. தமிழ் மக்களுடனான பிரச்சினைக்கான தீர்வைப் பற்றிப் பேசி சிங்கள வாக்குளை இழந்துவிடுவதை அவர்கள் விரும்பவில்லை என்பது தெளிவாகவெ தெரிகின்றது.

நேற்று யாழ்ப்பாணத்தில் பேசியபோதுகூட, அநுரகுமார தீர்வு குறித்து எதுவும் வாய் திறக்கவில்லை. அதைத் தருவோம் இதைத் தருவோம் என்று தமிழ் மக்களை ஏமாற்ற மாட்டோம் என்றார் அவர். ஏனெனில் எதைத்தருவது என்பதற்கு அவரிடம் எந்தப் பதிலும் இல்லை என்றும் இதனை எடுத்துக்கொள்ள முடியும். அவ்வாறானதொரு நிலையில் இரு தலைவர்களுக்கும் இடையிலான விவாதமும் வெறுமனே இலங்கையின் பொருளாதாரம் குறித்து மட்டுமானதாக மட்டுமே அமையுமாக இருந்தால் அது அரசுத் தலைவர் தேர்தலில் அவர்களின் வெற்றிக்கான கடும் சவாலை வழங்கி நிற்கும்.


எனவே இரு தலைவர்களுக்கும் இடையில் விவாதம் என்று ஒன்று நடந்தால் அதில் பொருளாதாரப் பிரச்சினையுடன் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்தும் கட்டாயம் அலசப்படவேண்டும். அதுவே இலங்கைக்கு நன்மை பயக்கும்.

# செய்வாரா, சம்மந்தன்?

என் சத்திய மூர்த்தி

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் அரசு கட்சி பொது வேட்பாளர் யாரையும் ஆதரிக்காது என்று சம்மந்தன் கூறி இருக்கிறார். அதேவேளை, தென்னிலங்கையின் ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாசாவின் அழைப்பை ஏற்று அவருடன், தமிழ் அரசு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கதையாடுவார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில், இரண்டாவது செய்தி குறித்து கருத்து தெரிவித்துள்ள அரசியல் விமர்சகர்கள் சிலர், அவ்வாறு தமிழ் அரசுக் கட்சியைப் பிரதிநிதிபடுத்தி, வேறொரு கட்சியுடன் பேச்சு நடத்துவதற்கு, சுமந்திரனுக்கு யார் ஆணை கொடுத்தது என்று கேள்வி எழுப்பி உள்ளனர்.



வேறு சிலரோ, சுமந்திரனோடு கதைக்கும் சஜித், கட்சியின் மற்ற தரப்பினருடனும் உரையாடுவாரா? என்ற கேள்வியையும் எழுப்பி உள்ளனர்.

சஜித் - -சுமந்திரன் சந்திப்பு நடக்க இருக்கிறது என்று கூறிய செய்திகளும் அவர்கள் ஜனாதிபதித் தேர்தல் குறித்து பேசப்போவதாக தெரிவிக்கவில்லை. குறிப்பாக, சஜித், சுமந்திரனை தமிழ் அரசு கட்சியின் பிரதிநிதியாக கருதி பேச்சு நடத்த இருப்பதாகவும் கருத்துத் தெரிவிக்கவில்லை.

தென்னிலங்கை அரசியல் குறித்து வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் அதிகமாகவும் அதீதமாகவும் அறிந்து வைத்துள்ளனர். அந்த அளவிற்கு. தமிழர் அரசியல் மற்றும் உணர்வுகள் குறித்து தென்னிலங்கையின் சிங்கள மக்கள் அறிந்து வைத்திருந்தால், இனப்பிரச்சினைக்கான தீர்வு எப்போதோ கிடைத்திருக்கலாம்.

ஏன், இனப்போர் முடிந்த கடந்த பதினைந்து வருடங்களில்கூட, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட எந்தவொரு தமிழர் தரப்பும். தென்னிலங்கை மக்களுடன் புதிய உறவைப் பேணி, பராமரிக்க எத்தனிக்கவில்லை என்பதே உண்மை. என்றாலும். ரணில், மஹிந்தா மற்றும் சஜித் போன்ற மூத்த தலைவர்கள், தமிழ் அரசு கட்சியின் உள்வீட்டு அரசியல் நிலைமை குறித்து ஓரளவேனும் அறிந்தே வைத்திருப்பார்கள்.

அந்த வகையில், தற்போதைய சூழலில் எந்தவொரு தனி தமிழ் தலைவரையோ, அவர்கள் அனைவரையுமோ சேர்த்து வைத்து பேச்சு நடத்தினாலும், அதனால் பலன் எதுவும் இல்லை என்பதையும் சஜித் போன்றோர் அறிந்தே வைத்திருப்பார்கள். தமிழர் வாக்குவங்கி என்பது இப்போது சிதறிவிட்டது என்பது அவர்களுக்குத் தெரியும். அது போன்றே, அந்த வாக்குவங்கி, தற்போது எந்த ஒரு கட்சித் தலைமைக்கோ, அல்லது தலைவருக்கோ கட்டுப்பட்டது அல்ல என்பதையும் அவர்கள் அறிந்திருப்பார்கள்.

### அனுபவ அறிவுரை

இது இவ்வாறு இருக்க, தமிழ் அரசு கட்சி ஜனாதிபதி வேட்பாளர்களை நிறுத்தாது என்று கூற சம்மந்தனுக்கு யார் அதிகாரம் கொடுத்தார்கள்? என்றும் சமூக ஊடகங்களில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. அந்தக் கேள்வியில் ஒரு வித நியாயம் இருக்கிறது. ஆனால், அது விதண்டாவாதமான கேள்வி என்பதும் புரிகிறது.

கடந்த பத்து ஆண்டுகளாக, சம்மந்தன் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் அல்லர். இன்று காணாமல் போய்விட்ட தமிழ்த்தேசியக் கூட்டணியின் தலைவராக மட்டுமே அவர் நாடாளுமன்றத்தில் செயலாற்றி வந்தார். அந்தப் பதவியும் கூட்டமைப்பு உடைந்த கையோடு இல்லாமல் போனது. சம்மந்தனின் உடல் நிலை காரணமாக, இப்போது அவர் அதிகமாக நாடாளுமன்றத்துக்குச் சென்று சபை நடவடிக்கைகளில் பங்குகொள்வதில்லை.

இதன் காரணமாகவும், அவரது வயது மூப்பு மற்றும் அனுபவம் காரணமாகவும் அவரை யாரும் கேள்வி கேட்பதும் இல்லை. ஆனால், சம்மந்தனுக்கு இது காலமும் கொடுத்து வந்த மரியாதையையும் யாரும் கொடுப்பதும் இல்லை என்பதும் உண்மை. அவர் இருக்கும்போதே. இல்லாதது போல் பாவித்து. அரசியல் நடவடிக்கைகளை தான்தோன்றி தனமாக முன்னெடுத்து வருகிறார்கள்.

இதுவே. கட்சியின் தலைமை பொறுப்பில்; அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முதிர்ந்த அரசியல்வாதி இருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறது. தென்னிலங்கை விடயம் எப்படியோ, தமிழ் சமூகத்தில், குடும்பம் என்றாலும், சமுதாயம் என்றாலும், பெரியோரை அண்டியே, அவர்களது அனுபவ அறிவுரையின் அடிப்படையிலேயே முடிவுகள் எடுத்து செயல்படுத்தப்பட்டு வந்துள்ளது. இப்போதும் அவ்வாறே பெருவாரி குடும்பங்களிலும் நடைபெறுகிறது.

ஆனால், அரசியல் களத்தில், அனுபவம், அறிவு செழுமை அனைத்தையும்விட தனிமனித ஆசையும், பேராசையும் அவற்றால் தோன்றும் தனிமனித ஆணவமுமே மேலோங்குகிறது. இது உலகளாவிய வழமை. வளர்த்த கடா மார்பில் குத்துவது என்ற பழமொழி வேறுஎங்கு பொருந்துகிறதோ இல்லையோ, அரசியலில் இது எல்லாம் சாதாரணம்.

தற்போதைய தமிழ் அரசியல் சூழலில் யார், எந்தக் கடாவை வளர்த்தார்கள் என்றெல்லாம் கேள்வி கேட்பதில் அர்த்தம் இல்லை. ஒவ்வொரு சமூக -அரசியல் தலைவரும் மற்றொரு தலைவரால் வளர்க்கப்பட்டு அவர் மார்பில் பாய்ந்திருக்கிறார்கள். அவர்களது காலத்தில், அவர்கள் வேறு ஒன்று அல்லது பல கடாக்களை வளர்த்து, அவை அவரது மார்பைப் பதம் பார்த்துள்ளன.

### கலங்கி தெளியும்...

ஆனால், ஜனாதிபதி தேர்தல் குறித்து தமிழர் அரசியல் பரப்பில் தற்போது தொடங்கி உள்ள வெளியாரோடான தொடர்புகள், உள்வீட்டு அரசியலில் பெரும் குழப்பங்களையே விளைவிக்கும். அதுவும் குறிப்பாக, கலங்கிய பின்னர் தெளியும் என்று எதிர்பார்க்கப்படும் தமிழ் அரசு கட்சியின் உள்கட்சி தேர்தல்கள் பிரச்சினையை இது போன்ற முன்னெடுப்புகள் குழப்பவே செய்யும்.

இதனால் பாதிக்கப்படப்போவது, தனிநபர்களும் அவர்களது பாழாய் போன கௌரவமும் மட்டுமல்ல. தமிழ் அரசுக் கட்சி எனப்படும் ஆல மரத்தின் அடி விழுதும்கூட பெருத்த அடி வாங்கும். அதனால், தமிழ்ச் சமூகத்தின் அரசியல் மீண்டும் இல்லாமல் ஆக்கப்படும். இந்த முறை அவ்வாறு நடந்தால், சமூக- அரசியல் தலைமைகளுக்கு அந்த ஒரு விடயத்திலாவது, சிங்களப் பேரினவாதத்தை குறைகூறி தப்பித்துக் கொள்ளமுடியாது.

அப்படிஎன்றால், அடுத்தகட்ட நடவடிக்கைகள்தான் என்ன? அல்லது, அதற்கான முன்னெடுப்புகள்தான் என்ன? பத்திரிகைச் செய்திகளை வைத்து நோக்கும்போது, தமிழ் அரசுக் கட்சி பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, வவுனியாவில் கூடிப் பேசிய தலைவர்களால் எந்தவொரு தீர்வையும் எட்ட முடியவில்லை. தொடர்ந்து கட்சித் தேர்தல்கள் குறித்த பிரச்சினை திருகோணமலை நீதிமன்றத்தின் முன் இன்னமும் தொடருகிறது.

தடாலடியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கே, நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, அதற்கான தேர்தலை ஒரு வருட காலத்திற்கு முன்னரே நடத்துகிறார் என்றே வைத்துக்கொள்வோம்.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# வாழ்வாதார உதவிகள் வெருகலில் கையளிப்பு

(மூதூர் நிருபர்)







திருகோணமலை மாவட்ட வெருகல் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள உப்பூறல் கிராமசேவகர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட 27 பயனாளிகளுக்கு வேல்ட் விசன் நிறுவனத்தின் அனுசரணையில் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ் தலைமையில் வாழ்வாதார உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்தக் குடும்பங்களின் வாழ்க்கை தரத்தை முன்னேற்றுவதே இதன் நோக்கமாகும்.(05)

# செய்வாரா, சம்மந்தன்?

4ம் பக்க தொடர்ச்சி...........

அப்போது, தமிழ் அரசுத் தலைவர், கட்சி வேட்பாளர்கள், கூட்டணி பேச்சு என்று ஒவ்வொரு கட்டத்திலும் பிரச்சினைகள் தோன்றிய வண்ணமே இருக்கும்.

அதிலும் குறிப்பாக கட்சி வேட்பாளர்களுக்கு, தமிழ் அரசின் 'வீடு சின்னம்' ஒதுக்கப்படவேண்டும் என்று தேர்தல் ஆணையத்திற்கான கடிதம் யார் பெயரில் இருக்கவேண்டும். கட்சியின் பொது செயலாளர் என்றால், அவர் யார், என்ற கேள்வியும் நீதிமன்றத்தின் முன்னர்தான் இருக்கிறது.

### தட்ட முடியாது

பரந்துபட்ட இந்தப் பின்னணியில், நீதிமன்றத்தை நாடுவதைவிட, இருதரப்புமத்தியஸ்தம்மூலம்பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொள்வது தான் தமிழ் அரசுக் கட்சிக்கும், தமிழர் அரசியல் எதிர்காலத்திற்கும் ஏற்ற வழி. இன்று தமிழ் அரசு பிரச்சினையை பேச்சு மூலம் தீர்த்துக் கொண்டால், நாளை, பிறிதொரு தமிழர் அரசியல் கட்சியில் தோன்றும் பிரச்சினையையும் அவ்வாறே தீர்த்துக்கொள்ள நாட்டமும் சமூக கட்டாயமும் தோன்றும். அதற்கான அவசியமும் அடுத்தடுத்து தோன்ற வாய்ப்பு உள்ளது.

ஆனால். தற்போது தமிழ் அரசு பிரச்சினையை தீர்த்து வைக்க யார் இருக்கிறார்கள்? பிரச்சினையில் சிக்கியுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சி தலைவர் சிறீதரன் மற்றும் அவரிடம் தோல்வியுற்ற சக நாடாளுமன்ற உறுப்பினர் சுமநத்திரன் ஆகியோர் யார் பேச்சுக்கும் எளிதில் மசியாதவர்கள். இதனை அவர்களும் அறிவார்கள்.

அதேநேரம் இருவருமே ஒருவரது பேச்சை ஒருவர் தட்டமுடியாது. அவர் வேறு யாரும் இல்லை. சாட்சாத் சம்மந்தனேதான். அவரது அரசியல் அனுபவத்திற்கும் ஏன் வயதுக்கும்கூட இரு தரப்பினரும் மரியாதை கொடுப்பார்கள் என்று சொல்லிவிடமுடியாது. ஆனால், தற்போதைய அவரது உடல்நிலை குறித்தாவது அனைத்துத் தமிழ் தரப்பினரும் கவலைப்படவேண்டும்.

வேறொன்றும் இல்லை என்றாலும், சம்மந்தனை அவமரியாதைசெய்வதைதமிழ்தேசியகட்சிஉறுப்பினர்களும் சமுதாயமும் ஏற்றுக் கொள்ளாது. அதனை கருத்தில் கொண்டாவது, இரு தரப்பினரும் ஏதாவது சமரசத்தை எட்டுவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

அதற்காக, 'சென்டிமென்ட்' விடயத்திற்காக தமிழ் அரசு பிரச்சினையை தடாலடியாக பேசி தீர்த்துக் கொள்ளவேண்டும் என்பதல்லபொருள். மாறாக, சம்மந்தன்என்றஅனுபவசாலியின் அறிவுரையை கேட்டு நடக்க வேண்டும் என்று இரு தரப்பினரும் விரும்ப வேண்டும். அவர்களே. சம்மந்தனின் அனுசரணையைக் கோரிப் பெறவேண்டும்.

### என்றென்றிற்கும் பிளவு

அதாவது, சம்மந்தன் போல் ஒருவரின் அனுசரணை இல்லை என்றால், தமிழ் அரசு என்றென்றிற்கும் பிளவுபட்டு நிற்கும் என்பதனை இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதாவது தலைவர் தேர்தலில் வெற்றிபெற்ற சிறீதரனுக்கு கிடைத்தாலும் கட்சியின் ஒரு துண்டே கிடைக்கும். எதிர் தரப்பினர் நிலையும் அதுவே.

இல்லையென்று சொல்லாமல், கடந்த காலங்களில், சம்மந்தன், சுமந்திரன் ஆதரவாக செயல்பட்டிருக்கிறார் என்று கூறி வந்தவர்கள் உண்டு. அதில் சிறிதளவாவது உண்மையும் இருந்தது. அந்த வகையில் அவரது நடுநிலைமையை வெளிப்படையாக சந்தேகிக்கவில்லை என்றாலும், அது குறித்து தங்கள் மனதிற்குள் குமைந்துகொள்பவர்கள் இருக்கத் தான் செய்வார்கள். அதிலும் குறிப்பாக, சுமந்திரனின் எதிரணியாக செயல்படும் சிறீதரன் தரப்பினர்.

அவர்களில் யாராவது, சம்மந்தனை சந்தேகப்பட்டால். அது அவர்களது தவறான எண்ணவோட்டத்தையே பிரதிபலிக்கும். என்றாலும், சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பால் இருக்க வேண்டும் என்ற வகையில், அடுத்தவர்களை நம்ப வைப்பதற்காகவாவது, சம்மந்தன், தனது துணையாக, வேறொரு மூத்த தலைவரையும் உடனிறுத்திக் கொள்ளலாம்.

தற்போதைய சூழலில் முன்னாள் கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா அந்த பொறுப்புக்கு உகந்தவராக இருக்கலாம். காரணம், சிறீதரன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதின் பின்னர் துவங்கிய உள்வீட்டு கலகங்களில், மாவையார், சிறீதரன் பக்கமாகவே இருந்து செயல்படுவதாக ஒரு கருத்து



நிலவுகிறது.

அல்லது, பெருந்தலைவர் என்ற நிலையில், சம்மந்தனே, நேரடியாக, சிறீதரன், சுமந்திரன் ஆகிய இருவரையும் தனித்தனியாகவோ, சேர்ந்தோ, தனது வீட்டிற்கு அழைத்து பேச்சுவார்த்தைகள்மூலம்ஒருஇணக்கப்பாட்டைஎட்டலாம். அது போன்றே, உடைந்து போன தமிழ் தேசிய கூட்டமைப்பையும் ஒட்ட வைக்க அவர், அடுத்த கட்டத்தில், முயற்சிக்கலாம். இல்லை, இல்லை, முயற்சி செய்ய வேண்டும்.

செய்வாரா. அதனை, மீண்டும் உயிர்ப்பிப்பாரா, தமிழர் அரசியல் தளத்தை?

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swebpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# கல்முனை சந்தை வர்த்தகர் சங்கத்தின் இப்தார் நிகழ்வு



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர பொதுச் சந்தை வர்த்தகர் சங்கத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வு புதன்கிழமை சந்தை முற்றத்தில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் அஹமட் லெப்பை ஹாஜியார் தலைமையிலும் அதன் செயலாளர் கே.எல். கபீரின் நெறிப்படுத்தலிலும் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி, பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, முன்னாள் மேயர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப், மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ் உட்பட அரச அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள், உலமாக்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஊர்ப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது மார்க்க சொற்பொழிவு மற்றும் துஆப் பிரார்த்தனை என்பனவும் இடம்பெற்றன.

(05)



# கொரோனாக் காலப் பகுதியில் ஜனாசா எரிப்பு முஸ்லிம்களிடம் மன்னிப்புகி கேட்கப் பத்திரம்

## அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்கிறார் ஜீவன்

கொரோனா பெருந்தொற்று காலப்பகுதியில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியில் கடைப்பிடிக்கப்பட்ட 'கட்டாய சடலம் எரிப்பு' (ஜனாசா எரிப்பு) கொள்கை தொடர்பில் முஸ்லிம் சமூகத்திடம் அரசு முறையாக மன்னிப்புகோரும் விதத்திலான அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்படும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.





முஸ்லிம் மக்களின் உணர்வுகள், மத நம்பிக்கை என்பன கருத்திற்கொள்ளப்படாமல் கொரோனா காலப்பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தால் அந்த சமூகத்தினர் மன உளைச்சலுக்கு உள்ளாகினர்.



அதற்காக மன்னிப்புக் கோருகின்றேன் எனவும் அமைச்சர் கூறினார்.

அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வு ஹற்றன் டி.கே.டபிள்யூ மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

கடந்த வருடம் ஜனவரி மாதமே நான் அமைச்சராக பதவியேற்றேன். எனினும், இது விடயத்தில் நீர்வழங்கல் அமைச்சு தொடர்புபட்டிருந்ததால் மன்னிப்பு கோருகின்றேன். அதேபோல அக்காலப்பகுதியில் இவ்விடயதானம் தொடர்பில் அமைச்சராக இருந்தவர்கள் இதற்குப் பொறுப்புக் கூறவேண்டும்.

கொரோனாவால் உயிரிழந்த ஒருவரின் சடலத்தை புதைப்பதால் நிலத்தடி நீருக்கு எவ்வித தாக்கமும் ஏற்படாது, நீர்வளம் மாசுபடாது என உலக சுகாதார அமைப்பு சுட்டிக்காட்டி இருந்தபோதிலும், விஞ்ஞானபூர்வமான விடயங்களைக் கருத்திற்கொள்ளாமல் பலவந்தமாக தகனம் செய்யப்பட்டது.

நான் அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் மேற்படி திட்டம் தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டது. துறைசார் நிபுணர்களால் தவறான கொள்கையே கடைபிடிக்கப்பட்டுள்ளது என ஆய்வுகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே, முஸ்லிம் மக்களிடம் அரசு முறையாக மன்னிப்பு கோர வேண்டும் என்பது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்படும். என்றார். (05)






# அறிவே ஆற்றல் தரும்

**தெய்வேந்திரம் வஜிதா**


'அறிவு வளர் அகிலம் ஆழ்' என்பது மூத்தோர் பொன்மொழி. பகுத்தறிவு என்ற ஒரு திறன் மனிதனிடத்தில் இருப்பதனால் தான் மனிதர்கள் ஏனைய பிற உயிர்களிடமிருந்து வேறுபடுகின்றனர். ஒரு மனிதனிடத்தில் உள்ள நல்லறிவையும் பண்பையும் கொண்டுதான் அவர்களை இந்த உலகம் அறிகிறது. தெளிந்த அறிவும் துல்லியமான சிந்தனையும் உடையவர்கள் பெரும் ஆற்றல் உடையவர்களாக கொள்ளப்படுவார்கள்.

நல்லறிவு உடையவர்கள் நயன்மிகு மரம் பழுத்ததை போல எல்லோர்க்கும் பயனுடையவர்களாக இருப்பார்கள். அறிவுடையவர்களின் ஆற்றல் பிறருக்கும் பலன் தரவல்லது.

அறிவு என்ற சொல் பிரித்தறிகின்ற திறன் தெளிந்த விவேகத்தின் வெளிப்பாடாக அறியப்படுகிறது. இதனை வள்ளுவர் 'எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்று விளக்கி நிற்கிறார். அதாவது இந்த உலகத்தில் பலவிதமான கருத்துகள் பலர் வாயிலாக கிடைக்கப்பெற்றாலும் அவற்றில் மெய் என்பது எது என்பதனை தெளிவாக புரிந்து கொள்வதே அறிவு என்று குறிப்பிடுகிறார்.

நூல்கள் பல கற்றவராயினும் அவர் பகுத்தறிவு அற்றவராயின் அவர் அறிவுடையவராக கொள்ளப்படமாட்டார். கல்வி அறிவு, அனுபவம் மூலமாக வருகின்ற அறிவு இரண்டும் உடைய நல்லெண்ணங்கள் உடையவர்கள் சிறந்த அறிவாற்றல் உடையவர்களாக கொள்ளப்படுவார்கள்.

அறிவு என்பது எல்லா மனிதர்க்கும் அவசியமாகும் அறிவில்லாதவர்கள் துன்பம் நிறைந்த வாழ்வே வாழ்வார்கள் என்று சொல்லப்படுகிறது. உதாரணமாக திருக்குறளில் பின்வருமாறு காணலாம் 'அறிவிலார் தாந்தம்மை பீழிக்கும் பீழை செறுவார்க்கும் செய்தல் அரிது' என்று விளக்குகிறார். அதாவது அறிவு அற்றவர்கள் தமக்கு தாமே செய்து கொள்ளும் துன்பமானது. அவர்கள் எதிரிக்கு கூட செய்யமாட்டார்கள் என்று கூறுகிறார்.




அறிவுடைமை என்பதன் பயன் அது தனக்கு மாத்திரம் பயன்படுவதாக இருக்க கூடாது தன்னை சார்ந்த சுற்றோருக்கும் மற்றோருக்கும் பயன்படக்கூடியதாக இருக்க வேண்டும். இல்லா விடின் அது அறிவு என கொள்ளப்படமாட்டாது என்கிறார் திருவள்ளுவர். இதனை அவர் 'அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின்நோய் தம்நோய்போல் போற்றாக் கடை' என்று வலியுறுத்தி நிற்கின்றார். தன்னை போல மற்றவர்களையும் பாவிக்கின்றவர்கள் உலகத்தில் மிகச்சிறந்த அறிவுடையவர்களாக இருக்கமுடியும்.

அறிவுடையவர்களிடத்தில் இயல்பாக நல்லவிடயங்களை சிந்திக்கவும் அவற்றை அடுத்தவர்க்கும் எடுத்துசொல்லும் குணம் இருக்கும் இயல்பாகவே அன்பும் அவர்களிடத்தில் குடியிருக்கும்.

அறிவுடைமை என்பது மனிதனுக்கு மிகப்பெரிய அரணாகும். இது எந்த சூழ்நிலையிலும் அவனை பாதுகாக்கும்.

திருவள்ளுவர் இதனை விபரிக்கையில் 'அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும் உள்ளழிக்க லாகா அரண்' என்று குறிப்பிடுகிறார்.

நிச்சயமற்ற இந்த உலக வாழ்வில் இறுதிக்காலம் வரையும் காப்பாற்றும் கருவி அறிவு தான் இதனை பகைவராலும் அழிக்கமுடியாது. இந்த அறிவு மனிதர்க்கு அழிவு வராமல் காக்கும் என்கிறார் டாக்டர் மு. வரதராசனார். ஆகவே மனிதர்க்கு அறவுடைமை மிகப்பெரிய ஆற்றலாகும். இதனை சரியாக பயன்படுத்தி கொள்ளுதல் நன்மை பயக்கும்.

இந்த உலகத்தில் மனிதர்களாக பிறந்தவர்கள் அனைவரும் பிறப்பினால் சமனாவர் இருப்பினும் அவர்களிடம் இருக்கின்ற பணம், புகழ், செல்வங்கள், ஆடம்பரங்கள், சொத்துக்கள் இவைஎல்லாம் தற்காலிகமாக மகிழ்ச்சியையும் பெருமையையும் கொடுக்கலாம். ஆதலால் மனிதர்கள் இவற்றை அடைவதற்கே அதிகம் முனைந்து நிற்கலாம்.

ஆனால் அறிவு இவை அனைத்திற்கும் மேலானது இது எந்த காலத்திற்கும் அழியாத பெருமை உடையது. என்றைக்கும் நம்மை காப்பது அறிவினால் உண்டாகும் ஆற்றல் என்றால் யாராலும் மறுக்கமுடியாது.

## தேவாரம்

பாடல் எண் : 1

**உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்**
**நிலவு லாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்**
**மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம் .**

பொழிப்புரை:

எவ்வுயிர்களானும் தம்மறிவால் உணர்தற்கும் ஓதுதற்கும் அரியவனாயும், அங்ஙனம் அரியவனாயினும் தன்னை அடைந்து உய்ய வேண்டும் எனும் பெருங்கருணையினால் பிறைச் சந்திரன் உலாவுதற்கும், கங்கையைத் தாங்குதற்கும் இடனாயுள்ள திருச்சடையை உடையனாயும், அளவிறந்த ஒளியுரு உடையனாயும், தில்லைச்சிற்றம்பலத்தே திருக்கூத்து ஆடுகின்றவனாயும் உள்ள கூத்தப் பெருமானின், அன்பர்கள் உள்ளத்தில் என்றும் மலர்ந்து நிற்கின்ற சிலம்பணிந்த திருவடிகளை வாழ்த்தி வணக்கம் செய்வாம்.

# ஆசிரியர்கள் மாணவர்களை அடித்து துன்புறுத்துவதை ஏற்கவேமுடியாது

## எச்சரிக்கிறார் வட மாகாண ஆளுநர்



பாடசாலை மாணவர்கள் மீது தண்டனை என்ற பெயரில் துன்புறுத்தல்கள் அதிகரித்து வரும் நிலையில், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸால் விசேட அறிவித்தல் ஒன்று விடுக்கப்படுகிறது.

கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொண்டு மாணவர்களை வளப்படுத்த வேண்டிய ஆசிரியர்களே, மாணவர்களை அடித்து, துன்புறுத்தி வைத்தியசாலைகளில் சேர்க்கும் சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளன. கடந்த சில மாதங்களுக்குள் இவ்வாறாக செயற்பட்ட ஆசிரியர்கள் தொடர்பில், ஆளுநரின் செயலகத்தால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பின்னர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

புதன்கிழமை பதிவாகிய மூன்று சம்பவங்கள் தொடர்பில் கௌரவ ஆளுநரின் பணிப்புரைக்கு அமைய உடனடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

'எழுத்தறிவித்தவன் இறைவன்' எனும் கூற்றுக்கு அமைய, இறைவனாக போற்றப்படக்கூடிய ஆசிரியர்கள் மாணவர்களுக்குத் துன்பம் இழைப்பதை ஒருபோதும் ஏற்க முடியாது.

கற்றலில் சிக்கல்களை எதிர்நோக்கும் மாணவர்களை எவ்வாறு கற்றலில் ஈடுபடச் செய்வது என்ற யுக்தியைக் கண்டறிந்து அவர்களுக்கான கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

அதற்காகவே ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு, அரசால் ஆசிரிய நியமனம் வழங்கப்படுவதோடு, மாதாந்த கொடுப்பனவும் வழங்கப்படுகிறது.

எனினும், ஒருசில ஆசிரியர்கள் மாணவர்களின் நிலையை அறியாது அவர்களை அடித்து துன்புறுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, தற்போது பதிவாகியுள்ள இந்த சம்பவங்கள் தொடர்பில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருக்க பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் தங்களின் பொறுப்புக்களை உணர்ந்து கடமைகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறின்றி பொறுப்பற்ற வகையில் செயற்படும் அதிபர், ஆசிரியர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருவதாக வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் தெரிவித்துள்ளார்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# உலக நாடக நாளில் 'மஹாகவி காளிதாசர்'!





(ஹஸ்பர் ஏ.எச் )

உலக நாடக தினத்தை முன்னிட்டு மார்ச் 27 ஆம், 28 ஆம் திகதிகளில் 'மஹாகவி காளிதாசர்' எனும் நாடகம் மேடையேறியது.

நாடகதினத்தைமுன்னிட்டுபல்கலைக்கழகங்களும் நாடகக் கம்பனிகளும் பல நாடகங்களை மேடையேற்றியதோடு அதையொட்டிய பல நிகழ்வுகளையும் நிகழ்த்தியுள்ளன.

அது போல் , களரி அரங்கக் கலை நிதியத்தின் தயாரிப்பிலேதிருகோணமலையிலுள்ளஉவர்மலை தேசிய பாடசாலையில் உலக நாடக தினத்தை முன்னிட்டு மஹாகவி காளிதாசர் ஆற்றுகை மேடையேறியது.

மஹாகவி காளிதாசர் நாடகத்தில் இலங்கையின் கிழக்கு,வடக்கு,மலையகம்எனப்பலபிரதேசங்களைச் சேர்ந்த கலைஞர்கள் கலந்துசிறப்பித்தனர்.(05)



# பட்டிருப்பு வலய பணிப்பாளரை இடமாற்றம் செய்யவேண்டாம்;

## பெற்றோர்கள் கவனவீர்ப்பு போராட்டம்

கடந்த சில நாள்களாக பட்டிருப்பு வலயக் கல்விப் அலுவலகத்திற்கு எதிராக சிலரின் தூண்டுதலில் நடைபெறும் போராட்டங்களுக்கு எதிராக புதன்கிழமை பெற்றோர்கள் வலயக் கல்விப் பணிமனைக்கு முன்யு கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர்கள் நேர்மையான வலயக் கல்விப் பணிப்பாளர் எங்களுக்கு தொடர்ச்சியாக வேண்டும், கிராமப்புற பாடசாலைகளை வாழவைக்க வந்த வலயக்கல்விப்பணிப்பாளரைவேலை செய்ய விடு, கௌரவ ஆளுநரே எமது பிள்ளைகளின்கல்விமுன்னேற்றத்தில் அக்கறை காட்டும் வலயக் கல்விப் பணிப்பாளரை வேலை செய்ய விடு, வலயக்கல்விப்பணிப்பாளரைசுயமாக இயங்கவிடு போன்ற பதாதைகளை தாங்கியவாறுவலயக்கல்விஅலுவலகம் முன்புஇந்தகவனவீர்ப்புபோராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர்கள் வலயத்துக்கு வருகை தந்திருந்த மாகாண கல்வி அதிகாரிகளை சந்தித்து தங்களது மகஜரைக் கையளித்தனர். (05)

# கணவரை மின்கம்பத்தில் கட்டி வைத்து தாக்கிக் கொலைசெய்த மனைவி கைது

## வெலிகமவில் சம்பவம்

மது போதையில் வீட்டுக்கு சென்ற கணவர், மனைவியால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் மாத்தறை , வெலிகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் மாத்தறை , வெலிகம பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடையவராவார்.

இவர்போதைக்குஅடிமையானவர் எனவும் தினமும் மது அருந்தி விட்டு வீட்டுக்குச்சென்றுதனதுமனைவியை தாக்குவதை வழக்கமாக கொண்டவர் எனவும் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், இவர் கடந்த 2 ஆம் திகதி அன்று வழமைபோல மது போதையில் வீட்டிற்கு சென்றுள்ள நிலையில்தனதுமனைவியைபலமாக தாக்கியுள்ளார்.

இதனையடுத்து இவரது மனைவி மற்றும் சிலர் இணைந்து கணவனை வீட்டிற்கு முன்பாக உள்ள கம்பத்தில் கட்டிவைத்துபலமாகத்தாக்கியுள்ளனர்.

காயமடைந்த கணவர் மயங்கிய நிலையில் வெலிகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இவரை கட்டி வைத்திருந்த கயிறு கழுத்தை நெரித்ததால் இறப்பு இடம்பெற்றிருக்கலாம்எனபொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதனையடுத்து சந்தேக நபரான மனைவி வெலிகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.(05)

# 76 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் பாணந்துறையில் நபரொருவர் கைது

பாணந்துறைஹிரணைபகுதியில் பெருந்தொகையான போதை மாத்திரைகள் மற்றும் கஞ்சாவை வைத்திருந்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் களுத்துறை பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட போது சந்தேகநபரிடம் ஹெரோயினுக்கு பதிலாக பயன்படுத்தப்படும் 76,796 போதை மாத்திரைகளும் ஒரு கிலோ கிராம்கஞ்சாவும்கைப்பற்றப்பட்டுள்ளன. (05)

# நாவிதன்வெளி பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

நாவிதன்வெளி பிரதேசசெயலகம் ஏற்பாடுசெய்த விசேட இப்தார் நிகழ்வு நாவிதன்வெளி பிரதேச செயலக கே. றிஸ்வி யஹ்சர் ஒருங்கிணைப்போடு பிரதேச செயலாளர் திருமதி சஜிந்திரன் ராகுலநாயகி தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் வரலாற்றில் ஒருதசாப்த கால இடைவெளிக்குப் பிறகு நடைபெற்ற இந்த இப்தார் நிகழ்வுக்கு மாவட்டமேலதிகஅரசாங்க அதிபர்வி. ஜெகதீசன்பிரதமஅதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.



இப்தார் விசேட மார்க்க சொற்பொழிவை நாவிதன்வெளி ஜம்இய்யத்துல் உலமா சபை தலைவரும்,, கல்முனை அல்- அமையா அரபுக்கல்லூரியின்தலைவருமான அஷ்ஷெய்க் ஏ.சி தஸ்தீக் (மதனி) நிகழ்த்தினார்.



இந்த இப்தார் நிகழ்வில், உதவிபிரதேச செயலாளர் பி. பிரணவரூபன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி திலகராணி கிருபைராஜா , நிர்வாக உத்தியோகத்தர் கேயோகேஸ்வரன்,உட்பட அலுவலகத்தில்கடமையாற்றும் தமிழ் - முஸ்லிம் உத்தியோகத்தர்கள் இனநல்லுறவோடு இப்தார் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.(05)

திறந்த வெளியரங்கில் கணக்காளர்

# கூட்டம்கூட்டாத ஒருங்கிணைப்புத் தலைவர் தமிழர் பிரதேசங்களுக்குத் தேவையில்லை

## கல்முனையில் ஜெயசிறில் காட்டம்



( வி.ரி. சகாதேவராஜா)

தமிழ் பிரதேசங்களுக்கு ஒருங்கிணைப்பு குழுத் தலைவராக ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் இங்கு இதுவரை கூட்டத்தையும் கூட்டவில்லை .இந்தப் பக்கமே வரவில்லை. இப்படிப்பட்டவர்கள் எங்களுக்குத் தேவையில்லை.

- இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கல்முனையில் தெரிவித்தார்.

கல்முனை தமிழ் மக்களின் பத்தாவது நாள் போராட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம் சிறிதரன் எம்.பியுடன் கலந்து கொண்டு கருத்து கூறுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார் .

அவர் மேலும் தெரிவிக்கையில் -

குறித்தஒருங்கிணைப்புதலைவர்தமிழ்பிரதேசம் எங்கும் மிகவும் பாரபட்சமான முறையில் நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டுள்ளார். உதாரணமாக அவருக்கு வழங்கிய 10 கோடி ரூபா நிதியில் காரைதீவு பிரதேச செயலகத்திற்கு மொத்தமாக 66 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கி இருக்கின்றார் .

இங்கு 12 கிராம சேவகர் பிரிவுகளுடன் 65 வீத தமிழ் மக்கள் வாழ்கின்ற காரைதீவு தமிழ் கிராமத்திற்கு ஆக 20 லட்சம் ரூபா நிதியை மாத்திரமே ஒதுக்கீடு செய்துள்ளார்.

மக்களிடம் எந்த கருத்துக்களும் முன்மொழிவுகளும் கேட்கப்படாமலே இந்த அற்ப ஒதுக்கீடு தான்தோன்றித்தனமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஏனைய 5 கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள 35 வீத முஸ்லிம்கள் வாழ்கின்ற மாவடிப்பள்ளி மாளிகைக்காடு முஸ்லிம் பிரதேசத்திற்கு மீதி 46 லட்ச ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேபோல் நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்கும் பச்சைப் பாரபட்சம் அநீதி இடம் பெற்றுள்ளது.

இதெல்லாம் இந்த அரசாங்க அதிபர் பார்ப்பதில்லையா?

இதை விட வேறு என்ன பாரபட்சம் நடக்க வேண்டும்?

நாங்கள் கூறுகின்றோம் இவரது இந்த நிதி எமக்குத் தேவையில்லை. இவ்வாறு இனத்துவேசம் பிடித்த தலைமைத்துவம்எங்களுக்குத்தேவை இல்லைஎன்றுநான்நினைக்கின்றேன்.

அப்படிப்பட்ட அவர்தான் இங்கும் ஒருங்கிணைப்பு குழுத் தலைவர். என்ன நடக்கிறது? ஒட்டுமொத்த தமிழ் பிரதேசங்களுக்கு அவரது தலைமைத்துவத்தை ஜனாதிபதி விலக்கிக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்டவர்கள் எமக்குத் தேவையில்லை.

இந்த மக்கள் 10 நாள்களாக மழையிலும் வெயிலிலும் உரிமை போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். பிரதேசமே முடங்கி கிடக்கிறது. பொறுப்பான அமைச்சர் என்ன செய்கிறார்? அரசாங்கம் இதுவரை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. ஏனிந்த அநீதி?

ஓர் இனத்தின் நியாயமான அதிகாரத்தின் மீது இன்னொருஇனம்இவ்வாறுசீண்டிக்கொண்டிருப்பது கல்முனையில்மட்டும்தான். அதற்கானகஒட்டுமொத்த முஸ்லிம்களை குற்றம் சாட்டமுடியாது. ஒருசில இனவெறி பிடித்த முஸ்லிம் அரசியல்வாதிகளே பின்னணியில் செயற்படுகிறார்கள். தற்போது உள்ள அரசாங்க அதிபரோடு இணைந்து தெற்கு பிரதேச செயலாளர் ஊடாக இந்த அதிகார பயங்கரவாதத்தை திணிக்கின்றார்கள். தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி ஆள நினைக்கிறார்கள். ஒருபோதும் முடியாது.

ஓர் இனம் தங்களுக்காக மாத்திரம் இல்லாமல் நமது பிள்ளைகளுக்காகப் போராடுகின்றது என்றால் அது தமிழினமாகத் தான் இருக்கும் .இதேவேளை ஒரு பிரதேச செயலாளர் அருகில் இருக்கின்ற இன்னொரு பிரதேச செயலகத்தின் மீது தனது அதிகார பயங்கரவாதத்தை மேற்கொள்வது என்றால் அதுவும் கல்முனையில் தான்.

எனவே இங்கு நடைபெறுகின்ற ஒவ்வொரு செயற்பாடுகளையும் தடுக்கின்ற ஒடுக்குகின்ற செயற்பாட்டை மேற்கொள்வது ஒரு போதும் பொருத்தமில்லை.

பொறுப்புள்ள அரசாங்கம் இந்த மக்களுக்கான நீதியை தாமதமின்றி வழங்க வேண்டும். இதுவே எமது கோரிக்கை. - என்றார். (05)

# அனலைதீவில் மின் உற்பத்தி நிலைய பணியை ஆரம்பித்த இந்திய நிறுவனம்



யாழ்ப்பாணம் அனலை தீவு பகுதியில் புதிதாக நிர்மாணிக் கப்படவுள்ள சூரிய கலங்கள் மற்றும் காற்றாலை மின் உற்பத்தி



திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்றது.



இலங்கை இந்திய அரசு கள் ஏற்படுத்திக்கொண்ட இணக் கப்பாட்டுக்கு அமைய இந்திய தனியார் நிறுவனத்தின் நிதி உதவி யுடன் மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.



அந்நிலையில் இந்திய நிறுவ னத்தின் மின் பொறியியலாளர் தினேஷ்பாண்டியன் முன்னிலையில் நேற்று அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது.(05)

# கத்தியால் குத்தப்பட்டு ஒருவர் படு கொலை

## காலியில் சம்பவம்

காலி பிரதேசத்தில் கத்தியால் குத்தப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் காலி பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய ஓட்டோ சாரதியாவார்.

உயிரிழந்தவர் நீண்ட காலமாகத் தனது அயல் வீட்டாருடன் முரண்பாட்டில் ஈடுபட்டிருந்த நிலையில் சம்பவத்தின் போது இவர், அயல் வீட்டிற்கு முன்பாக சென்று அவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது, இந்த அயல் வீட்டின் உரிமையாளரான சந்தேக நபர் இவரைக் கத்தியால் குத்தி காயப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து காயமடைந்தவர் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.(05)



காலைக்கதிர் Kalaikkathir

# மாவட்ட செயலகச் சித்திரை கலை விழாவில் தோன்றிய வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர்

வவுனியாவில் இடம்பெற்ற சித்திரை கலைவிழாவில் வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் காட்சிப்படுத்தப்பட்டது.

வவுனியா மாவட்டசெயலகம் மற்றும் மாவட்ட கலாசார அதிகாரசபையின் ஏற்ப்பாட்டில் நகரசபை மைதானத்தில் சித்திரை கலைவிழா நிகழ்வு நேற்று (வியாழக்கிழமை) கோலகலமாக ஆரம்பமாகியது.

இதன்போது பல்வேறு விடயங்களை மையப்படுத்திய கண்காட்சிக் கூடங்களும் திறந்து வைக்கப்பட்டன. இந்நிலையில் வவுனியா வடக்கு நெடுங்கேணிவெடுக்குநாறிமலைஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் காட்சிப்படுத்தப்பட்டதுடன், புதூர் நாகதம் பிரான் கோவிலும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. (05 - 100)

# வவுனியாவில் பல லட்சம் பணத்துடன் பெருமளவு கஞ்சா மீட்பு: மூவர் கைது






வவுனியா விசேட குற்றப்புலனாய்வுப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் பெருமளவு பணம் மற்றும் கஞ்சா போதைப்பொருளுடன் மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

மேற்படிநபர்கள்கார்ஒன்றில்போதைப்பொருளைக் கடத்திச்செல்ல முற்பட்டுள்ளனர். இந்நிலையில் அதனை வழிமறித்த பொலிஸார் சோதனையில் ஈடுபட்டனர்.

இதன்போதுகுறித்தகாரினுள்ஒன்பதுகிலோகிராம் கஞ்சா மற்றும் பத்தொன்பது லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பணமும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா, நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 34, 27, 25 வயதுடைய நபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (05 - 100)

# கிழக்கு மாகாணத்தில் கல்விசாரா ஊழியர்களின் இடமாற்றம் இரத்து

## முஷாரப் எம்.பி.யின் தலையீட்டினால்



(ஏயெஸ் மௌலானா)

கிழக்குமாகாணபாடசாலைகளில்கடமையாற்றும் கல்வி சாரா ஊழியர்களின் வருடாந்த இடமாற்றம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரபின் வேண்டுகோளின் பேரில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் உடன் அமுலுக்கு வரும் வகையில் இரத்து செய்யப்பட்டுள்ளது.

தேசிய பாடசாலைகளின் ஆளணி விடயம் தொடர்பில் பொறுப்புடைமையைக் கொண்டிராத கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் தலையீடு மற்றும் முறையான பதிலீடுகள் எதுவுமின்றி இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இவ்விடயம் தொடர்பாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோரை திங்கட்கிழமை நேரடியாக சந்தித்து தெளிவுபடுத்திய நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப், முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்ட இவ்விடமாற்றத்தை இரத்து செய்யுமாறு வலியுறுத்தியிருந்தார்.

இதையடுத்து கல்வி அமைச்சு விடுத்த அறிவுறுத்தலின் பேரில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் மேற்படி இடமாற்றம் இரத்து செய்யப்பட்டுள்ளன.

இந்த இடமாற்ற உத்தரவு குறித்து கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.சி. திசாநாயக்க கடிதம் மூலம் அறிவித்துள்ளார். (05)

# பொலிஸ் உத்தியோகத்தர் யாழ். பண்ணையில் கைது

## மாடு கடத்திய குற்றச்சாட்டின் கீழ்



புதன்கிழமை இரவு 11 மணியளவில், யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சிங்கள பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட மூவர் திருட்டுத்தனமாக 08 மாடுகளைக் கடத்திக் கொண்டு செல்லும்பொழுது விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரும், மீட்கப்பட்ட மாடுகளுடன் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் புங்குடுதீவு பிரதேசத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வரும்பொழுது யாழ்.பண்ணையில் வைத்து கைது செய்யப் பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# விருந்துபசாரத்தில் மோதல்; ஒருவர் தாக்கப்பட்டு சாவு

## சந்தேகநபர் கைது

புத்தளம், வணாத்தவில்லு, காட்டுப்புளியங்குளம் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர் உயிரிழந்துள்ளார் என வணாத்த வில்லுவ பொலிஸார் தெரிவித்தனர்.

வணாத்தவில்லுவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற விருந்துபசாரத்தின் போதே இந்த மோதல் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த நபருக்கும் சந்தேக நபருக்குமிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக கடுமையாக தாக்கப்பட்ட இவர்வைத்தியசாலையில்சேர்க்கப்பட்ட போதே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் தாக்குதலை மேற்கொண்டார் என சந்தேகிக்கப்படும் நபரை கைது செய்துள்ளதாக வணாத்தவில்லுவ பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

# சித்திரை கலைவிழா நிகழ்வு வவுனியாவில் கோலாகலம்





வவுனியா மாவட்ட கலாசார அதிகாரசபை நடாத்தும் சித்திரைக் கலை விழா நேற்று (வியாழக்கிழமை) கோலாகலமாக ஆரம்பமாகியது.

வவுனியாநகரசபைமைதானத்தில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை அதிதியாக கலந்துகொண்ட மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத் சந்திர நிகழ்வை உத்தியோக பூர்வமாகஆரம்பித்துவைத்தார்.

இதில் மாவட்ட கலாமன்றங்களின் கண் காட்சிக் கூடங்கள், மாணவர் களின் சித்திரக் கண்காட்சி, சமுர்த்தி பயனாளிகளின் விற்பனை மற்றும் கண்காட்சி நிலையங்கள், உள்ளூர் உற்பத் தியாளர்களின் காட்சிப்படுத் தல்கள், இராணுவம் மற்றும் பொலீஸ் பிரிவுகளின் சாகச நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதேவேளை குறித்த நிகழ்வு இன்றும் (வெள்ளிக்கிழமை) இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05 - 100)

# யானை தாக்குதலுக்கு உள்ளானவருக்கு சம்மாந்துறையில் நிதி வழங்கி வைப்பு

(சர்ஜுன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மலையடிக்கிராமம் -04 ஐச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் அண்மையில் வீரச்சோலையில் வைத்து யானை தாக்குதலுக்கு உட்பட்டு காயமடைந்தவமைக்கான மருத்துவ நிவாரண கொடுப்பனவு நேற்று (வியாழக்கிஶ்ழமை) சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபாவின் ஆலோசனை, மற்றும் பணிப்புரைக்கமைய கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எல்.எம்தாஸீம் அவர்களினால்வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர் எம்.எஸ் அஸாருதீனும்கலந்துகொண்டார். (05)

# முசலி பிரதேச விவசாயிகளுக்கு உயர் விளைச்சல் மிளகாய் விதை

மன்னார், முசலி பிரதேசத்தின் அகத்திமுறிப்பு அளக்கட்டு, பொற்கேணி அளக்கட்டு, வேப்பங்குளம் அளக்கட்டு, பிச்சைவாணிபங்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த, தெரிவுசெய்யப்பட்ட நூற்றுக்கணக்கான விவசாயிகளுக்கு, அதிஉயர்விளைச்சல் தரக்கூடியமிளகாய்விதைகள்வழங்கும் வைபவம், கடந்த ஞாயிற்றுக்கிழமை அளக்கட்டு பிரதேசத்தில் இடம்பெற்றது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தலைமையில், முசலிபிரதேசசபையின் முன்னாள் உப தவிசாளர் பைரூஸின் ஏற்பாட்டில், இந்தியாவின் பாலாஜி வென்சர்ஸ் லங்கா நிறுவனத்தின் நிதி அனுசரணையில், மீள்குடியேறியுள்ள முசலிபிரதேசசெயலாளர்பிரிவுக்குட்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், மேற்படி உயர்தரத்திலான மிளகாய் விதைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த விவசாய ஆலோசகரான கணேஷ், மன்னார் மாவட்ட விவசாய பணிப்பாளர் சகிலா பானு மற்றும் மன்னார் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் முஜாஹிர் உட்பட பிரமுகர்களும் பங்கேற்றிருந்தனர்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வை மீள ஆரம்பிக்க இதுவரை நிதி கிடைக்கவில்லை!

## வழக்கு விசாரணை வைகாசி 16 வரை ஒத்திவைப்பு



(அ.ராயூகரன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குதொடுவாய் பகுதியில் 29.06.2023 அன்று கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி அகழ்வு தொடர்பான வழக்கு நேற்று (வியாழக்கிழமை) முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இடம்பெற்றவழக்குவிசாரணைகளில் முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா, முல்லைத்தீவுமாவட்டசெயலகபிரதமகணக்காளர் மயில்வாகனம் செல்வரட்ணம், கொக்கிளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி,கொக்கிளாய் பகுதி கிராம அலுவலர், சட்டத்தரணிகளான வி கே நிறஞ்சன், கணேஸ்வரன் மற்றும் காணாமல் போனோர் அலுவலகம் சார்பாக சட்டத்தரணி துஷ்யந்தினி ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

இந்நிலையில் அகழ்வுப் பணியை நடத்த இன்னும் நிதி கிடைக்கப்பெறவில்லைஎனவும்தற்போதுஅகழ்வுப்பணிக்கென போடப்பட்டுள்ள பாதீடு அதிகமாக காணப்படுவதாக அமைச்சு தெரிவித்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட செயலக பிரதம கணக்காளர் மயில்வாகனம் செல்வரட்ணத்;தால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது இந்நிலையில் பாதீடு சீர்செய்து அனுப்பி நிதியைப் பெறுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அத்தோடுகுறித்தவழக்குவிசாரணை வைகாசி மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குதொடுவாய் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழியின் முதல் கட்ட அகழ்வானது 06.09.2023 அன்று ஆரம்பமாகி பதினொரு நாள்கள் நடைபெற்று 17 உடற்பாகங்கள் மீட்கப்பட்ட நிலையில் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

மீண்டும் அகழ்வின் இரண்டாம் கட்ட பணிகள் கடந்த 20.11.2023 அன்று ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக ஒன்பது நாள்கள் நடைபெற்று மொத்தமாக 40 எலும்புக்கூட்டு தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளதுடன் இரண்டாம் கட்ட அகழ்வுபணி இடைநிறுத்தப்பட்டிருந்தது.

அத்தோடு அகழ்வு ஆய்வு நடவடிக்கையின் இறுதி நாள்களில் மேற்கொள்ளப்பட்ட ஸ்கான் பரிசோதனை மூலம் மனித புதை குழிக்கு மேற்கு பக்கமாக இரண்டு மீற்றர் நீளத்திற்கு உடலங்கள் காணப்படுகின்றன எனப் பரிசோதனை மூலம் கண்டறியப்பட்டிருந்தது. அதனையடுத்து குறித்த அகழ்வுப்பணி இவ்வருடம் மார்ச் மாதம் நடைபெற திட்டமிடப்பட்டிருக்கின்றநிலையில் நிதிகிடைக்கப்பெறாமையால் நேற்றைய தினத்துக்கு தவணையிடப்பட்டிருந்தது



வழக்கின்போது அகழ்வாய்வு நடவடிக்கையில் ஈடுபட்ட தொல்லியல் திணைக்கள பேராசிரியர் ராஜ் சோமதேவவால் இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில் கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் மீட்கப்பட்ட எச்சங்கள் 1994 ஆண்டு தொடக்கம் 1996 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரியவை என தெரிவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# யாழ். புங்குடுதீவு மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டி

யாழ்புங்குடுதீவுமத்தியகல்லூரியின்வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று(வெள்ளிக்கிழமை) பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

கல்லூரியின் அதிபர் கி.விநோதன் தலைமையில் நடைபெறவுள்ளதோடு இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக உதவி கல்விப்பணிப்பாளர் பொன்னம்பலம் சகிலனும் சிறப்பு விருந்தினர்களாக சூழகம்அமைப்பின்செயலாளர்கருணாகரன்நாவலன் மற்றும் அரச சார்பற்ற நிறுவன முகாமை யாளர் வி.சுதர்சன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (05)

# பண்டிகைகளுக்காக இன்று முதல் விசேட போக்குவரத்து



பண்டிகை காலத்தை முன்னிட்டு இன்று முதல் விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகஇலங்கைபோக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

''பண்டிகையை முன்னிட்டு தமது சொந்த ஊர்களுக்கு செல்லும் பயணிகளின் நன்மை கருதி விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைய, 200 இற்கும் அதிகமான விசேட பஸ்கள் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படவுள்ளன'' என்று இலங்கை போக்குவரத்து சபையின் பொது முகாமையாளர் பண்டுக ஸ்வர்னஹங்ச தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு எதிர்வரும் 10ஆம் திகதி முதல் தினமும் 12 விசேட தொடருந்துகளை சேவையில் ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தொடருந்துதிணைக்களத்தின்பொதுமுகாமையாளர் இந்திபொலகே தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 15 ஆம் திகதி வரை இந்த ரயில்கள் சேவையில் ஈடுபடுத்த தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.




# சுகாதார சீர்கேடுகளுடன் காணப்பட்ட வர்த்தக நிலையங்களுக்குத் தண்டம்

## யாழ். பண்டத்தரிப்பில் அதிரடி

யாழ்ப்பாணம்பண்டத்தரிப்புபொது சுகாதாரபரிசோதகர்பிரிவிற்கு உட்பட்ட பகுதியில்சுகாதார குறைப்பாடுகளுடன் காணப்பட்டவர்த்தகநிலையங்களுக்கு எதிராகமல்லாகம்நீதிவான்நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்குகளில் 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன்ஒருவர்த்தகநிலையத்தை சீல் வைத்து மூடுமாறும் மன்று உத்தரவிட்டுள்ளது.

பண்டத்தரிப்பு பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் இ.யொனிப் பிரகலாதன் தலைமையில், அப்பகு திகளில்உள்ளவர்த்தகநிலையங்களில் திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன் போது, ஒரு வர்த்தக நிலையத்தில் 19 வகையான காலாவதியான பொருள்கள் 245 ஐ விற்பனைக்காக வைத்திருந்த வர்த்தக நிலைய உரிமையாளருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் உரிமையாளருக்கு 95 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன், கடையை சீல் வைத்து மூடுமாறும் மன்று உத்தரவிட்டது.

பிறிதொரு வர்த்தக நிலையம் ஒன்றில் புழு மொய்த்த, வண்டரித்த அரிசி, கடலைப்பருப்பு என்பவற்றை விற்பனைக்காக காட்சிப்படுத்தி வைத்திருந்த உரிமையாளருக்கு 65 ஆயிரம்ரூபாதண்டம்விதிக்கப்பட்டது.

அத்துடன், காலாவதியான உணவுப்பொருள்கள் வைத்திருந்த மற்றுமொரு உரிமையாளருக்கு 2 ஆயிரத்து 500 ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது.

சுகநலத்திற்குஒவ்வாதநிலையிலும் காலாவதியான வண்டடித்த மா உப்பு போன்றவற்றை கொண்டு மிக்சர் உற்பத்தியை மேற்கொண்டவருக்கு 45 ஆயிரம் ரூபா விதிக்கப்பட்டது.

அதேவேளை ஆனைக்கோட்டைப் பகுதியில் கு.பாலேந்திரகுமார் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது, மோசமான நிலையில் உணவகத்தை நடத்திய இருவரிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்த நிலையில் இருவரும் நீதிமன்றில் சமுகமளிக்காமையால் இருவரிற்கும் பிடியாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

(05)

# கிண்ணியா நத்வத்துல் புஹாரி பள்ளியில் இப்தார் நிகழ்வு



(எச்.எம் ஹலால்தீன்)

கிண்ணியாநத்துவத்துல் புஹாரிப் பள்ளியில் நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு இடம் பெற்றது.



அல் ஹிமா இஸ்லாமிக் சர்வீஸ் அமைப்பின் ஏற்பாட்டில் ஏ.எம்.ஏ.நூருல்லாஹ் மௌலவின் நிதி உதவி மூலம் இந்த இப்தார் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அல்ஹிமா இஸ்லாமிய சர்வீஸ் அமைப்பின் இணைப்பாளர் பைரூஸினால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த இந்நிகழ்வில் மௌலவிமார்கள் உலமாக்கள் உட்பட சுமார் 250 இற்கு மேற்பட்ட நோன்பாளிகள் கலந்து கொண்டனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.04.2024இல் வெளியிடப்பெற்றது